# தீவகக் கல்விக் கோட்டத்தின் தற்காலக் கல்விநிலை

*கலாநிதி தேவராசா முகுந்தன்*

*முதுநிலை விரிவுரையாளர்*

*இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம்*

## 1.0 அறிமுகம்

வேலணை, புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, மண்டைதீவு, காரைநகர் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கி இலங்கையின் வடமேற்குத் திசையில் அமைந்துள்ள தீவுத் தொகுதி தீவகம் என்றழைக்கப்படுகின்றது. இது யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ளது.

தீவகமானது புவியியல் ரீதியாக தென்னிந்தியாவிற்கும் யாழ்ப்பாணப் பெருநிலப்பரப்புக்கும் இடையில் அமைந்துள்ளதால் வரலாற்று ரீதியாக பொருளாதார, சமூக, பண்பாட்டு ரீதியில் சிறப்பிடம் பெற்றுள்ளது (குகபாலன், 1994). தீவகத்தில் இருந்து காலத்திற்குக் காலம் தனிநாயகம் அடிகள் போன்ற உலகப் புகழ்பெற்ற அறிஞர்கள் தோன்றியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு பகுதியான தீவகத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மற்றைய பிரதேசங்களுடன் ஒப்பிடும்போது தீவகமானது கல்வி வசதி, சுகாதார வசதி, குடிநீர், போக்குவரத்து, மின்சாரம அபிவிருத்தி போன்ற பௌதீக நிலைமைகள் குறைந்த பிரதேசமாக உள்ளது. இதன் காரணமாக தீவக மக்கள் பல்வேறு இடப்பெயர்வுகளை மேற்கொள்ளகின்றனர். தீவக மக்கள் யாழ்ப்பாணத்திற்கும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெயர்நது வாழ்கின்றனர். 1953 ஆம் ஆண்டில் அப்போதைய அரசு அதன் பொருளாதாரக் கொள்கையின் காரணமாக பல்வேறு குடியேற்றங்களை ஏற்படுத்தியது. இதன்போது தீவகத்தைச் சேர்ந்த குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான மக்கள் கிளிநொச்சியில் குடியேறினர்.இதனை விட கடந்த காலப்போர் நடவடிக்கைகளாலும் தீவகத்தைச் சேர்ந்த பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்தனர்.

### 1.1 தீவகத்தில் கல்வி நிர்வாகம்

தீவகக் கல்வி வலயமானது நெடுந்தீவுக் கல்விக் கோட்டம், ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டம், வேலணைக் கல்விக் கோட்டம், காரைநகர்க் கல்விக் கோட்டம் என நான்கு கல்விக் கோட்டங்களாக வகுக்கப்பட்டள்ளது. தீவகத்தின் தற்போதைய கல்விநிலைமையானது மோசமாகவுள்ளதாக பல்வேறு அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. இந்தப் பின்புலத்தில் இக்கட்டுரையானது, தீவகக் கல்விக் கோட்டத்தின் தற்போதைய கல்வி நிலைமையான கடந்த 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பொதுப் பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய முயல்கின்றது.

## 2.0 ஆய்வுப் பிரச்சினை

தீவகக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேறுகள் ஒப்பீட்டு ரீதியில் நாட்டின் ஏனைய பிரதேசங்களின் பரீட்சைப் பெறுபெறுகளை விடக் குறைவாக உள்ளன.

க.பொ.த. (சா.த) கற்ற ஒருவர் உயர்தரம் கற்க தகுதிபெற வேண்டுமாயின் ' அவர் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தாய்மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களுள் மூன்று பாடங்களில்

திறமைச் சித்தியுடன் சித்தியடைந்திருக்க வேண்டும். 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றியோரில் உயர்தரம் கற்கத் தகுதியடைந்தோரின் விபரம் சதவீதங்களில் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 1**

**க.பொ.த. உயர் தரம் கற்கத் தகுதியானோர் சதவீதம்**

| ஆண்டு | தீவக வலயம் | யாழ் மாவட்டம் | வடமாகாணம் | இலங்கை |
|---|---|---|---|---|
| **2014** | 34.0 | 64.43 | 64.19 | 69.02 |
| **2015** | 34.0 | 62.59 | 60.38 | 67.17 |

( மூலம்:- இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், 2015)

மேலுள்ள அட்டவணை தீவகக் கல்வி வலயத்திலிருந்து 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த. (சா.த.) பரீட்சைக்கு தோற்றயோரில் உயர்தரம் கற்கத் தகுதியடைந்தோரின் சதவீதம் முழு நாட்டிலிருந்தும் இப்பரீட்சக்குத் தோற்றி உயர்தரம் கற்கத் தகுதியடைந்தோரின் சத வீதத்திலும் அரைவாசிப் பெறுமானத்தை அண்மித்தள்ளதைக் காட்டுகின்றது. மேலும் இச்சதவீதமானது யாழ் மாவட்டம், வடமாகாணம் என்பவற்றில் இருந்து இப்பரீட்சைக்குத் தோற்றியோரின் சதவீதத்திலும் பார்க்க மிகக் குறைவாக உள்ளது.

மேலும் இப்பெறுபேறுகள் தேசிய ரீதி, மகாணரீதி, மாவட்ட ரீதி ஆகியவற்றில் 2014 ஆண்டை விட 2015 ஆம் ஆண்டில் சித்தியடைந்தோரின் சதவீதமானது குறைவடைந்துள்ளது. ஆனால் தீவகத்தைப் பொறுத்த வரையில் இப்பெறுபேற்றில் மாற்றம் ஏற்படாது 34 சதவீதமானோரே 2014, 2015 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் சித்தியடைந்துள்ளமை இங்கு அவதானத்திற்குரியது.

மேலும் தீவக கல்வி வலய மாணவரின் க.பொ.த. (உ.த.) பரீட்சைப் பெறுபெறுகளும் மொத்த நாட்டின் பெறுபேற்றுடன் ஒப்பிடும்போது மிகக்குறைவாக உள்ளமை நோக்கத்தக்கது. இவ்வாறு பொதுப் பரீட்சைகளில் மாணவர் பெறுபெறுகள் குறைவாகக் காணப்படுவது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவ்வாறு இலங்கையில் மாணவர்கள் பொதுப்பரீட்சைகளில் சித்தியடையும் சராசரி நூற்று விதத்திலும் பார்க்க தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் பாடங்களில் சித்தியடையும் சதவீதம் மிகக் குறைவாகக் காணப்படுவது பாரிய பிரச்சினையாக உள்ளது.

## 3.0 நோக்கம்

இந்தப் பின்னணியில் தீவகக் கல்விக் கோட்டத்தில் தற்போது காணப்படும் கல்விநிலையை பொருத்தமான பகுப்பாய்வுகளுடள் முன்வைப்பதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

## 4.0 தரவு சேகரித்தல்

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், வடமாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றினால் வெளியிடப்பட்ட பல்றேு தகவல்களை இந்த ஆய்வில் தரவுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இத்தரவுகள் ஆய்வாளரால் நேரடியாகச் சேகரிக்கப்படாத இரண்டாம்நிலைத் தரவுகள் எனலாம்.

## 5. தீவகக் கல்விவலயத்தின் தற்போதைய நிலை

### 5.1 பாடசாலைகள்

தீவகக் கல்வி வலயத்தில் மொத்தமாக 77 பாடசாலைகள் காணப்படுகின்ற போதிலும் அவற்றுள் 13 பாடசாலைகள் பல்வேறு காரணங்களால் தற்போது தற்காலிகமாக இயங்குவதில்லை. இதனால் மாணவர்கள் பாடசாலைக் கலவிக'காக நீண்ட தூரம பயணம் செய்ய வேண்டியுள்ளது. தற்போது இப்பிரதேசத்தில் இயங்குகின்ற 64 பாடசாலைகளின் விபரம் கோட்ட ரீதியாகவும் பாடசாலை வகைரீதியாகவும் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 1**

**தீவகக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகள்**

| கோட்டம்/ வகை | 1AB | 1C | II | III | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நெடுந்தீவு | 0 | 3 | 1 | 4 | 8 |
| ஊர்காவற்றுறை | 1 | 2 | 6 | 8 | 17 |
| வேலணை | 1 | 2 | 11 | 12 | 26 |
| காரைநகர் | 2 | 0 | 2 | 9 | 13 |
| **மொத்தம்** | **4** | **7** | **20** | **33** | **64** |

*(மூலம்: வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இணையத்தலம் 2016)*

இங்கு காரைநகர்க் கோட்டத்தில் மொத்தமாக 13 பாடசாலைகள் காணப்படுகின்றன. இந்த காரைநகர்க் கோட்டத்தினை தீவகக் கல்வி வலயத்திலிருந்து பிரித்தெடுத்து வலிகாமம் கல்வி வலயத்துடன் எதிர்காலத்தில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக அண்மைக் காலப் பத்திரிகைச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

### 5.2 தரம் ஐந்து புலமைப் பரீட்சைப் பெறுபெறுகள்

வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு நிதியுதவி அளிப்பதையும் கிராமப் புற சிறுவர்களுக்கு நல்ல பாடசாலைகளில் அனுமதியளிப்பதையும் நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இன்று இவை தேவையற்ற பிள்ளைகளும் தோற்றுகின்றனர். இப்பரீட்சையில் தமது பிள்ளைகள் சித்தியடைவதை பெற்றோரின் தமது கௌரமாகக் கருதும் நிலை முழு இலங்கையிலும் காணப்படகின்றது.

இந்த நிலையில் தீவக கல்வி வலயத்திலுள்ள 54 பாடசாலைகளில் இருந்து 2014 ஆம் ஆண்டும் 56 பாடசாலைகளிலிருந்து 2015 ஆம் ஆண்டும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றினர். இந்த ஆண்டுகளில் பரீட்சைக்குத் தோற்றிய மற்றும் சித்தியடைந்த மாணவர் விபரம் கீழுள்ள அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2**

**தீவக கல்வி வலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்**

| விபரம் | 2014 | 2015 |
|---|---|---|
| தோற்றியோர் | 728 | 711 |

| | | |
|---|---|---|
| சித்தியடைந்தோர் | 59 | 36 |
| சித்தியடைந்தோர் சதவீதம் | 8 | 5 |

*(மூலம்: வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இணையத்தலம் 2016)*

மேலுள்ள அட்டவணையின்படி தீவகக் கல்விக் கோட்டத்திலுருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரின் சதவீதமானது பத்திலும் குறைவாக உள்ளனர். மேலும் சித்தியடைந்தோர் சதவீதமானது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2015 ஆம் ஆண்டில் 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளமை அவதானிக்கத்தக்கது. இந்த வீழ்ச்சிக்கான காரணங்கள் விரிவாக ஆராயப்படல் அவசியமானதாகும்.

மேலும் 2014 ஆம் ஆண்டில் 54 பாடசாலைகளில் இருந்து 728 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றினர் என முன்பு பார்த்தோம். இந்த 54 பாடசாலைகளில் 25 பாடசாலைகளில் இருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் ஒருவருமே சித்திடையவில்லை என்பது கவனத்தில் எடுக்கத்தக்கது. இவ்வாறே 2015 ஆம் ஆண்டு தீவகத்திலுள்ள 56 பாடசாலைகளில் இருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய 711 மாணவருள் 39 பாடசாலைகளில் இருந்து தோற்றிய மாணவருள் ஒருவருமே இப்பரீட்சையில் சித்தியடையவில்லை.

இவ்விபரங்கள் தீவகப் பிரதேசத்தில் ஆரம்பக் கல்வியின் நிலை மோசமடைந்திருப்பதை எடுத்துரைக்கின்றது எனலாம்.

## 5.3 க.பொ.த. (சா.த) பரீட்சைப் பெறுபேறுகள்

தீவகக் கல்வி வலயத்தில் உள்ள 30 பாடசாலைகளில் க.பொ.த. (சா.த) வகுப்புக்கள் உள்ளன. இவற்றிலிருந்து 2014 ஆம் ஆண்டில் 570 பேரும் 2015 ஆம் ஆண்டில் 712 இப்பரீட்சையில் ஆறும் அதற்கு மேற்பட்ட பாடங்களுக்கு பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை கீழுள்ள அட்டவணை காட்டுகின்றது.

**அட்டவணை 2**

### தீவகக் கல்விக் கோட்ட க.பொ.த. (சா.த.) பெறுபேறுகள்

| மாணவர் பெறுபேறு | | 2014 | 2015 |
|---|---|---|---|
| **தோற்றியோர்** | | 570 | 712 |
| உயர்தரம் கற்கத் தகுதி பெற்றோர் சித்தியடைந்தோர் | எண்ணிக்கை | 195 | 242 |
| | சதவீதம் | 34 | 34 |
| உயர் தரத்தில் கணித விஞ்ஞான பாடங்கள் கற்கத் தகுதி பெற்றோர் / சித்தியடைந்தோர் | எண்ணிக்கை | 85 | 159 |
| | சதவீதம் | 15 | 22 |

*(மூலம்: வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இணையத்தலம் 2016)*

தீவகத்திலிருந்து க.பொ.த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றியோரில் கடந்த இரு ஆண்டுகளிலுமம தலா 34 சதவீதமானோரே க.பொ.த. (உ.த.) கல்வி கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். அதாவது இப்பரீட்சைக்குத் தோற்றிய மூவரில் ஒருவரே சித்தியடைந்துள்ளார். இது தீவகக் கல்வி வலயத்தில் தற்போது காணப்படும் மிக தீவிரமாகக் கீழடைந்துள்ள கல்வி நிலையைச் சுட்டிக்

காட்டுகின்றது. 2014 ஆம் ஆண்டை விட 2015 ஆம் ஆண்டில் தீவகத்திலிருந்து இப்பரீட்சைக்குத் தோன்றியோரின் எண்ணிக்கை 25 சதவீதமாக அதிகரித்துள்ள போதிலும் இவ்விரு ஆண்டுகளிலும் க.பொ.த. (உ.த.) கல்வி கற்பதற்கு தகுதி பெற்றுள்ளவர்களின் சதவீதமானது சமனான பெறுமானத்தையே காட்டுவது அவதானிக்கத்தக்கது. அதாவது மாணவர் பெறுபேறானது உயர்வடையாமல் சமனான அளவிலேயே உள்ளது.

இலங்கையில் ஒருவர் க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞானத் துறையில் பயில வேண்டுமாயின் அவர் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் விஞ்ஞான பாடத்திற்கு திறமைச் சித்தியும் கணிதத்திற்கு சாதாரண சித்தி உட்பட ஆறுபாடங்களில் சித்திடைந்திருத்தல் வேண்டும். இவ்வாறே ஒருவர் பௌதீக விஞ்ஞானத் துறையில் கல்வி கற்க வேண்டுமாயின் அவர் சாதாரண தரத்தில் கணித பாடத்தில் திறமைச் சித்தியும் விஞ்ஞான பாடத்தில் சாதாரண சித்தியும் உட்பட ஆறு பாடங்களில் சித்திடைய வேண்டும்.

தீவகக் கல்விக் கோட்டத்தில் இருந்து 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த. (சா.த.) பரீட்சைக்குத் தோற்றியோரில் உயர் தர வகுப்புக்களில் கணித. விஞ்ஞான பாடங்களைக் கற்பதற்கு தகுதி பெற்றோரின் சதவீதமானது 15, 22 ஆகக் காணப்படுகின்றது. இந்த நிலையானது திருப்தியற்றதாக உள்ளமை இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது. உயர் வகுப்புக்களில் கணித விஞ்ஞானக் கல்வியைக் கற்றவர்களுக்குரிய வேலை வாய்ப்பு வீதமானது கலைத்துறையில் கற்றவர்களை விடத் திருப்திகரமாக அமைந்துள்ளமை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் உயர் தர வகுப்புக்களில் கணித. விஞ்ஞான பாடங்களைக் கற்பதற்கு தகுதி பெற்றோரின் சதவீதமானது இவ்விரு ஆண்டுகளிலும் 15 இலிருந்து 22 ஆக அதிகரித்துள்ளமை மேலுள்ள அட்டவணை 2 இல் காட்டப்பட்டள்ளது. இது தீவகப் பகுதியில் மாணவரின் கணித விஞ்ஞானப் பாடங்களின் பெறுபேறுகள் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 5.3.1 கோட்ட ரீதியாக மாணவர் பெறுபேறுகள்

தீவகத்திலுள்ள நான்கு கல்விக் கோட்டங்களிலுமிருந்து 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் க.பொ.த.(உ.த.) கற்கக் தகைமை பெற்றோரின் விபரம் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 3**

**உயர்தரம் கற்கத் தகுதியானோர்**

| ஆண்டு | விபரம் | **நெடுந்தீவு** | **ஊர்காவற்றுறை** | **வேலணை** | **காரைநகர்** |
|---|---|---|---|---|---|
| 2014 | தோற்றியோர் | 56 | 150 | 364 | 100 |
| | தகுதிபெற்றோர் எண்ணிக்கை | 14 | 56 | 80 | 45 |
| | தகுதிபெற்றோர் சதவீதம | 25 | 37.3 | 30.3 | 45 |
| 2015 | தோற்றியோர் | 52 | 172 | 337 | 151 |
| | தகுதிபெற்றோர் எண்ணிக்கை | 14 | 64 | 100 | 64 |
| | தகுதிபெற்றோர் சதவீதம | 26.9 | 37.2 | 29.7 | 42.4 |

(*(மூலம்: வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இணையத்தலம் 2016)*

2014 ஆம் ஆண்டில் தீவக வலயத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றியோரில் வேலணை கல்விக் கோட்டத்தில் கூடுதலானோர் சித்தியடைந்தள்ளனர். வேலணையில் இருந்து தோற்றிய 364 மாணவருள் 80 பேர் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர். தீவக வலயத்தில் உள்ள மற்றைய கல்விக் கோட்டங்களான ஊர்காவற்துறைக் கல்விக் கோட்டத்தில் 56 பேரும் காரைநகர் கல்விக் கோட்டத்தில் 45 பேரும் நெடுந்தீவு கல்விக் கோட்டத்தில் 14 பேரும் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர். சதவீத அடிப்படையில் எடுத்து நோக்கும்போது காரைநகர்க் கோட்டத்தில் 45 சதவீதமானோரும், ஊர்காவற்றுறைக் கோட்டத்தில் 37.3 சதவீதமானோரும் வேலணைக் கோட்டத்தில் 30.3 சதவீதமானோரும் நெடுந்தீவுக் கோட்டத்தில் 25 சதவீதமானோரும் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர். இதன்படி தீவகக் கல்வி வயயத்திலுள்ள பாடசாலைகள் மோசமான பெறுபேறுகளை வெளிக் காட்டுவதை அவதானிக்க முடியும். இவற்றிலும் நெடுந்தீவுக் கல்விக் கோட்டத்தின் பெறுபேறு மிகமோசமானதாக அமைந்துள்ளமை இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

2015 ஆண்டிலும் இக்கோட்ங்களின் பெறுபேறுகள் திருப்த்திகரமாக அமையவில்லையென்பதை மேலுள்ள அட்டவணை 3 காட்டுகின்றது. இந்த ஆண்டிலும் நெடுந்தீவுக் கல்விக் கோட்டமே மிகக் குறைவான பெறுபேற்றை வெளிக் காட்டியுள்ளமை இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

2014, 2015 ஆகிய ஆண்டுகளில் தீவக கல்வி வலயத்திலிருந்து க.பொ.த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றியோரில் உயர்தரத்தில் விஞ்ஞானப் பாடங்களைத் கற்பதற்குத் தகுதியானோர் விபரம் கோட்ட ரீதியாக கீழுள்ள அட்டவணை 4 இல் காட்டப்பட்டுள்ளது

**அட்டவணை 4**

**உயர்தரத்தில் விஞ்ஞான கணித பாடங்கள் கற்கத் தகுதியானோர்**

| ஆண்டு | விபரம் | **நெடுந்தீவு** | **ஊர்காவற்றுறை** | **வேலணை** | **காரைநகர்** |
|---|---|---|---|---|---|
| 2014 | தோற்றியோர் | 56 | 150 | 364 | 100 |
| | தகுதிபெற்றோர் எண்ணிக்கை | 14 | 56 | 80 | 45 |
| | தகுதிபெற்றோர் சதவீதம | 25 | 37.3 | 30.3 | 45 |
| 2015 | தோற்றியோர் | 52 | 172 | 337 | 151 |
| | தகுதிபெற்றோர் எண்ணிக்கை | 14 | 64 | 100 | 64 |
| | தகுதிபெற்றோர் சதவீதம | 26.9 | 37.2 | 29.7 | 42.4 |

*(மூலம்: வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இணையத்தலம் 2016)*

தீவக கல்வி வலயத்தினுள் உள்ள கோட்டங்களுள் ் ஒப்பீட்டு ரீதியில் காரைநகர்க். கோட்டமானது உயர்வான பெறுபெற்றைக் காட்ட நெடுந்தீவுக் கோட்டமானது தாழ்நிலையில் உள்ளது.

மொத்தத்தில் எடுத்து நோக்குகின்ற போது நெடுந்தீவுக் கல்விக் கோடடத்தில் தற்போது இயங்குகின்ற எட்டுப் பாடசாலைகளில் 1C .பாடசாலைகளான நெடுந்தீவு மகா வித்தியாலயம், நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம், நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க கல்லூரி ஆகியவற்றிலேயே க.பொ.த. (சா.த.) வகுப்புக்கள் காணப்படுகின்றன. இம்மூன்று பாடசாலைகளிலும் இருந்து மொத்தமாக 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் முறையே 56, 52 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இவர்களில் சுமார் 25 சதவீதமானோரே ஒவ்வொரு ஆண்டிலும் உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். அதாவது தோற்றிய ஒவ்வொரு நான்கு மாணவரில் ஒருவர் மட்டுமே உயர் தரம் கற்பதற்குக் தகுதி பெற்றுள்ளார். மேலும் இக்கல்விக் கோட்டத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றியோரின் எண்ணிக்கை 2014 ஆம் அண்டில் மூன்று ஆகவும் 2015 ஆம் ஆண்டில் ஏழு ஆகவும் காணப்படுகின்றது. இப்பெறுமானங்களை இப்பிரதேசத்தில் இருந்து இப்பரீட்சைக்குத் தோற்றியோரின் எண்ணிக்கையின் சதவீதமாக நோக்கும்போது இவை முறையே 5.4 ஆகவும் 13.5 ஆகவும் அமைகின்றன. இத்தகவல்கள் நெடுந்தீவுக் கல்விக் கோட்டத்தின் தற்போதுள்ள மிகக் குறைவான கல்வி நிலையை தெளிவாகக் காட்டுகின்றன.

ஊர்காவற்றுறை கல்விக் கோட்டத்தில் ஒன்பது பாடசாலைகளில் க.பொ.த. (சா.த.) வகுப்புக்கள் காணப்படுகின்றன. இப்பாடசாலைகளில் இருந்து 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றியோரில் இவ்விரு ஆண்டுகளிலும் ஏழத்தாள 37 சதவீதமானோரே உயர்தரம்

கற்பதற்குத் தகுதியைப் பெற்றுள்ளனர். இவர்களில் 2014 ஆம் அண்டில் 12 சதவீதமானோரும் 2015 ஆம் ஆண்டில் 23.8 சதவீதமானோரும் உயர்தரத்தில் கணித விஞ்ஞான பாடங்களைக் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். இங்கு 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அதற்கு அடுத்த ஆண்டில் கணித விஞ்ஞானம் கற்பதற்குத் தகுதிபெற்றோரின் சதவீதமானது ஏறத்தாள இருமடங்காக அதிகரித்துள்ளமை இங்கு அவதானிக்கத்தக்கது. மொத்தத்தில் எடுத்து நோக்கும்போது ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டத்தின் தற்போதைய கல்வி நிலை கவலையளிக்கும் விதத்தில் அமைவதை இப்பெறுபேறுகள் தெளிவாக்குகின்றன.

வேலணைக் கல்விக் கோட்டத்திலுள்ள க.பொ.த. (சா.த.) வகுப்புக்கள் காணப்படும் 14 பாடசாலைகளில் இருந்து 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் ஒவ்வோர் ஆண்டும் ஏறத்தாள 30 சதவீதமானோரே உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். மேலும் உயர்தரத்தில் கணித விஞ்ஞானப் பாடங்களைக் கற்பதற்குத் தகைமை பெற்ற மாணவர்களின் சதவீதமானது இவ்விரு ஆண்டகளிலும் முறையே 14.8 ஆகவும் 20.2 ஆகவும் காணப்படுகின்றன. இப்பெறுபேறுகள் திருப்தியளிக்கக் கூடியவையல்ல.

காரைநகர் கல்விக் கோட்டத்தில் தற்போது இயங்குகின்ற 13 பாடசாலைகளில் 1AB வகைப் பாடசாலைகளான காரைநகர் இந்துக் கல்லூரி, காரைநகர் யாழ்ரன் கல்லூரி ஆகியவற்றிலும் II வகைப் பாடசாலைகளான சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரை வியாவில் சைவவித்தியாலயம் ஆகியவற்றிலுமாக மொத்தமாக நான்கு பாடசாலைகளில் மட்டுமே சாதாதர வகுப்புக்கள் காணப்படுகின்றன. இம்நான்கு பாடசாலைகளில் இருந்தும் 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் பரீட்சைக்குத் தோற்றியொரில் முறையே 45, 42.5 சதவீதமானோர் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர். மேலும் 25, 28.4 சதவீதமானோர் உயர்தரத்தில் கணித விஞ்ஞான பாடங்களைக் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். ஒட்டுமொத்த தீவகத்துடன் ஒப்பிடும்போது இவை திருப்தியாக அமைந்தாலும் இப்பெறுபேறுகள் போதுமானவையாக அமையவில்லையென்றே கூறவேண்டியுள்ளது.

### 5.3.2 பாடரீதியான பெறுபேறுகள்

தீவகக் கல்வி வலயத்தின் க.பொ.த. (சா.த.) பெறுபேறுகளை மேலே நோக்கப்பட்டது. இப்பெறுபேறுகளை தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம்,, வரலாறு,, ஆங்கிலம் ஆகிய முக்கிய பாடங்களின் அடிப்படையில் அட்டவணை 5 காட்டுகின்றது.

**அட்டவணை 5**

**தீவகக் கல்வி வலயத்தில் முக்கிய பாடங்களில் சித்தியடைந்தோரும் சதவீதமும்**

| பாடம் | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| தமிழ் | 409 | 71.63 | 523 | 73.46 |
| கணிதம் | 212 | 37.19 | 273 | 38.34 |
| விஞ்ஞானம் | 168 | 29.42 | 283 | 39.97 |
| வரலாறு | 306 | 53.59 | 28.3 | 53.3 |
| ஆங்கிலம் | 43 | 7.53 | 66 | 9.31 |

*(மூலம்: வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இணையத்தலம் 2016)*

மேலேயுள்ள அட்டவணையின்படி தீவககல்வி வலயத்தில் ஆங்கில பாடத்தின் சித்தி வீதமானது மிகவும் மோசமானதாகக் காணப்படகின்றது. அதாவது 2014 ஆம் ஆண்டில் 7.53% ஆனோரும் 2015 ஆம் ஆண்டில் 9.31% ஆனோரும் சித்தியடைந்துள்ளனர். அதாவது பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு 100 பேரிலும் 10 இற்கும் குறைவானோரே சித்தியடைந்துள்ளமை இற்கு குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் கணித, விஞ்ஞான பாடங்களில் மாணவரின் பெறுபேறும் திருப்திகரமாக அமையவில்லையென்பதை இவ்வட்டவணை காட்டுகின்றது. வரலாறு பாடத்தில் 50 சதவீதத்திற்கு அதிகமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். எனினும் இது போதுமானதல்ல. தமிழ் மொழியில் 70 சதவீததிற்கு அதிகமானவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இப்பேறுகள் கோட்ட ரீதியாக கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 6**

**தீவகக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் க.பொ.த.(சா.த) பெறுபேறுகள்**

| | நெடுந்தீவு | | | | ஊர்காவற்றுறை | | | | வேலணை | | | | காரைநகர் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | | 2015 | | 2014 | | 2015 | | 2014 | | 2015 | | 2014 | | 2015 | |
| | எ | % | எ | % | எ | % | எ | % | எ | % | எ | % | எ | % | எ | % |
| **தமிழ்** | 36 | 64 | 36 | 69 | 108 | 72 | 140 | 81 | 183 | 69 | 216 | 64 | 82 | 82 | 131 | 87 |
| **கணிதம்** | 17 | 30 | 17 | 33 | 63 | 42 | 73 | 41 | 89 | 34 | 115 | 34 | 46 | 46 | 68 | 45 |
| **விஞ்ஞானம்** | 12 | 25 | 12 | 23 | 39 | 26 | 73 | 43 | 75 | 28 | 132 | 40 | 44 | 44 | 66 | 44 |
| **வரலாறு** | 25 | 45 | 25 | 48 | 70 | 5 | 95 | 55 | 137 | 52 | 167 | 50 | 70 | 70 | 93 | 62 |
| **ஆங்கிலம்** | 3 | 5 | 3 | 6 | 11 | 7 | 14 | 8 | 15 | 6 | 22 | 7 | 15 | 15 | 27 | 18 |

தீவகக் கல்வி வலயத்தில் உள்ள கோட்டங்களில் ஆங்கில பாடத்தின் சித்தி வீதம் மிகவும் குறைவான நிலையில் உள்ளது. 2014 ஆம் ஆண்டில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர் ஆகிய கோட்டங்களில் முறையே 5%, 7%, 6%, 15% ஆகிய மாணவர்களே ஆங்கில பாடத்தில் சித்தியடைந்துள்ளனர். 2015 ஆம் ஆண்டைப் பொறுத்த வரையில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர் ஆகிய கோட்டங்களில் முறையே 6%, 8%, 7%, 18%, ஆகிய மாணவர்களே ஆங்கில பாடத்தில் சித்தியடைந்துள்ளனர். இரண்டு வருடங்களிலும் மற்றைய கோட்டங்களுடன் ஒப்பிடும்போது காரைநகர்க் கோட்டத்தில் ஓரளவு முன்னேற்றகரமான பெறுபேறு உள்ளது உயர் கல்வி கற்றல், தொழில் வாய்ப்பு, மற்றவர்அவதானிக்கத்தக்கது.

**5..4 க.பொ.த. (உ.த) பரீட்சைப் பெறுபெறுகள்**

தீவகக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து க.பொ.த.(உ.த) பரீட்சைக்கு 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் தோற்றியோரை துறைரீதியாக பின்வரும் அட்டவணை … காட்டுகின்றது.

## அட்டவணை 7

## துறைரீதியாக பரீட்சக்குத் தோற்றிய மாணவர் விபரம்

| துறை | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|
| | **எண்ணிக்கை** | **சதவீதம்** | **எண்ணிக்கை** | **சதவீதம்** |
| கலை | 138 | 84.66 | 159 | 77.94 |
| வர்த்தகம் | 16 | 9.82 | 35 | 17.16 |
| உயிரியல் விஞ்ஞானம் | 4 | 2.45 | 4 | 1.96 |
| பௌதீக விஞ்ஞானம் | 5 | 3.07 | 6 | 2.94 |
| **மொத்தம்** | **163** | **100** | **204** | **100** |

*(மூலம்: வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இணையத்தலம் 2016)*

இப்பிரதேசத்தில் உள்ள மாணவருள் அதிகமானோர் கலைத்துறைத் பாடங்களையும் மிகக் குறைவான எண்ணிக்கையினர் விஞ்ஞானத்துறைப் பாடங்களையும் கற்பதை இவ் அட்டவணை எடுத்துக் காட்டுகின்றது. விஞ்ஞானத்துறையில் கற்பதானது கலைத்துறையில் கல்வி கற்பதை விட எதிர்காலத்தில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு இலகுவானதாக அமையும் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

### 5.4.1 கலைத்துறைப் பெறுபெறுகள்

கலைத்துறையில் கடந்த இரு வருடங்களாக மாணவர் பெற்ற பெறுபேறுகளை பாடசாலை ரீதியாக கீழுள்ள அட்டவணை சுட்டிக் காட்டுகின்றது.

## அட்டவணை 8

## கலைத்துறையில் மாணவர் பெறுபேறுகள்

| பாடசாலை | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|
| | தோற்றியோர் | பல்கலைக்கழக தகுதி பெற்றோர் | தோற்றியோர் | பல்கலைக்கழக தகுதி பெற்றோர் |
| நெடுந்தீவு மகா வித்தியாலயம் | 6 | 6 | 11 | 10 |
| நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் | 4 | 4 | 4 | 0 |
| நெடுந்தீவு றோ.க | 8 | 7 | 6 | 6 |
| ஊ.புனித அந்தோணியார் க. | 16 | 15 | 23 | 19 |
| கரம்பன் சிறிய புஸ்பம் | 11 | 9 | 20 | 16 |
| நயினாதீவு ம.வி. | 12 | 6 | 10 | 7 |
| புங்குடுதீவு ம.வி. | 8 | 6 | 20 | 10 |
| வேலணை ம.க. | 37 | 28 | 34 | 24 |
| காரைநகர் இந்துக் கல்லூரி | 22 | 12 | 18 | 15 |
| காரைநகர் யூழ்ரன் | 14 | 9 | 13 | 11 |
| **மொத்தம்** | **138** | **102** | **159** | **118** |

*(மூலம்: வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இணையத்தலம் 2016)*

கலைத்துறையைப் பொறுத்த வரையில் தீவகத்திலுள்ள பாடசாலைகளில் கடந்த இரு வருடங்களில் க.பொ.த. (உத) பரீட்சைப் பெறுபெறுகள் ஓரளவு திருப்திகரமாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

எனினும் 2014 ஆம் ஆண்டில் காரைநகர் இந்துக் கல்லூரி, நயினாதீவு ம.வி. ஆகிய பாடசாலைகளின் பெறுபேறுகளும் 2015 ஆம் ஆண்டில் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் பெறுபேறும் கலைத்துறையைப் பொறுத்த வரையில் திருப்த்திகரமாக இல்லையென்றே குறிப்பிட வேண்டியுள்ளது.

### 5.4.2 வர்த்தகத்துறையில் மாணவர் பெறுபேறுகள்

கடந்த இருவருடங்களில் தீவகக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் இருந்து வர்த்தகக்துறையில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் விபரம் கீழுள்ள அட்டவணை … இல் காட்டப்பட்டள்ளது.

**வர்த்தகத்துறை மாணவர் பெறுபேறுகள்**

| பாடசாலை | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|
| | தோற்றியோர் | பல்கலைக்கழக தகுதி பெற்றோர் | தோற்றியோர் | பல்கலைக்கழக தகுதி பெற்றோர் |
| ஊ/புனித அந்தோணியார் க | 4 | 3 | 3 | 1 |
| நயினாதீவு மகா வித்தியாலயம் | - | - | 7 | 2 |
| புங்குடுதீவு ம.வி. | 1 | 0 | 5 | 0 |
| வேலணை மத்திய கல்லூரி | 3 | 3 | 8 | 5 |
| காரைநகர் இந்துக் கல்லூரி | 3 | 3 | 9 | 5 |
| காரைநகர் யுாழ்ரன் | 5 | 3 | 3 | 2 |
| **மொத்தம்** | **16** | **12** | **35** | **15** |

*(மூலம்: வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இணையத்தலம் 2016)*

தீவகத்திலிருந்து மிகக் குறைவானோரே வர்த்தகத்துறையில் கல்வி கற்கின்றனர். இலங்கையில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனங்கள் தீவகத்தைச் சேர்ந்தவர்களாலேயே நடத்தப்படுவது அவதானிக்கத்தக்கது. எதிர்காலங்களில் இப்பகுதி மாணவர்கள் வர்த்தகத்துறையை தெரிவு கற்பதை ஊக்கப்படத்தவதானது..

### 5.4.3 உயிரியல் விஞ்ஞானம்

தீவகத்தில் விஞ்ஞானத்துறையில் உயர் தரம் பயில்வோரின் எண்ணிக்கை மிகக் குறைவென முன்னர் பார்த்தோம். இங்கு உயிரியல் விஞ்ஞானமானது தீவகத்தில் ஊர்காவற்றுறை புனித அந்தோணியார் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, காரைநகர் யாழ்ரன் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடத்தப்படுகின்றது. 2014. 2015 ஆகிய ஆண்டுகளில் ஊர்காவற்றுறை புனித அந்தோணியார் கல்லூரியில் இருந்து தலா ஒருவர் வீதம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். அவர்களுள் 2014 ஆம் ஆண்டு தோற்றியவர் மட்டும் சித்தியடைந்தள்ளார்.

வேலணை மத்திய கல்லூரியில் இருந்து 2014 ஆம் ஆண்டு நால்வரும் 2015 ஆம் அண்டு மூவரும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களுள் 2014 ஆம் ஆண்டு தோற்றிய அனைவரும் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்வதற்கு தகுதி பெறவில்லை. ஆனால் 2015 ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய மூவரில் ஒருவர் இதற்குத் தகுதி பெற்றுள்ளார்.

காரைநகர் இந்துக் கல்லூரியில் இருந்து 2014 ஆம் ஆண்டு உயிரியல் விஞ்ஞானத்துறையில் ஒருவரும் பரீட்சைக்குத் தோற்றாத அதேவேளையில் 2015 ஆம் ஆண்டில் இப்பாடசாலையில் இருந்து இருவர் தோற்றி அவர்களுள் ஒருவர் பல்கலைக்கழகத் தெரிவுக்குத் தகைமை பெற்றுள்ளார்.

### 5.4.4 பௌதீக விஞ்ஞானப் பிரிவு

தீவகத்தில் வேலணை மத்திய கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோணியார் கல்லூரி, காரைநகர் யாழ்ரன் கல்லூரி ஆகிய மூன்று பாடசாலைகளில் மட்டுமே உயர்தரப் பிரிவில் பௌதீக விஞ்ஞானம் கற்பிக்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறை புனித அந்தோணியார் கல்லூரியில் இருந்து 2014 ஆம் பரீட்சைக்குத் ஒரேயொரு மாணவன் தோற்றியிருந்தார். அவர் பல்கலைக் கழக அனுமதிக்குத் தகுதி பெற்றிருந்தார். 2015 ஆம் ஆண்டில் இப்பாடசாலையில் இருந்து இப்பரீட்சைக்கு பௌதீக விஞ்ஞானத்துறையில் ஒருவரும் தோற்றவில்லையென்பது கவனத்தில் கொள்ள வேண்டியதொன்றாகும்.

வேலணை மத்திய கல்லூரியைப் பொறுத்த வரையில் பௌதீக விஞ்ஞானத்துறையில் 2014 ஆம் அண்டில் ஒருவரும் 2015 ஆம் அண்டில் மூவரும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இவர்களுள் 2014 ஆம் ஆண்டு தோற்றியவர் பல்கலைக் கழக அனுமதிக்கு தகைமை பெறாத அதேவேளையில் 2015 ஆம் ஆண்டு தோற்றிய மூவரில் ஒருவர் தகைமை பெற்றிருந்தார்.

காரைநகர் யாழ்ரன் கல்லூரியைப் பொறுத்த வரையில் 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் உயர்தரப் பிரிவில் பௌதீக விஞ்ஞானத்துறையில் முறையே இருவரும் ஒருவரும் தோற்றியிருந்தனர். அவர்கள் அனைவரும் பல்கலைக் கழக அனுமதிக்கு தகைமை பெற்றிருக்கவில்லை.

## 6.0 தீவுப் பகுதியில் கல்விப் பெறுபேறுகள் மோசமானதாக அமைய ஏதுவான காரணங்கள்

தீவக வலயத்திலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1: 15 ஆக அமைகின்றது. பொதுவாக நோக்கும்பொது இந்த விகிதம் சிறப்பானதாகத்தென்பட்ட போதிலும் பாடரீதியாக எடுத்து நோக்கும்போது ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. தீவகப்பிரதேசத்தில் இப்பாடங்களில் மாணவர் பெறுபேற்று வீழ்ச்சிக்கு இது காரணமாக அமையலாம்.

தீவகத்தில் உள்ள ஓரளவு வசதியானவர்களும் அரச உத்தியோகத்தர்களும் தமது பிள்ளைகளை யாழ்ப்பாணத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்க அனுப்புகின்றனர். இப்பிள்ளைகள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகுவதானது தீவக வலயத்தின் கல்விப் பெறுபேற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

மேலும் தீவகத்தில் வர்ழும் மக்களில் சுமார் 20 சதவீதமானோர் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்றனர். இந்த மக்களால் தமது பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்த முடியதில்லையென பேராசிரியர் குகபாலன் (1994) குறிப்பிடகின்றார்.

தீவக வலயத்தில் உள்ள பெருன்பாலான பாடசாலைகளில் உரிய கட்டட வசதிகள், ஆய்வுகூட வசதிகள், தளபாடங்கள் என்பன காணப்படாமை மாணவரின் கற்றலைப் பாதித்து அவர்களின் பெறுபேற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**7. தீவகக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் கல்வீ மேம்பாட்டிற்கான சிபாரிசுகள்**

தீவகக் கல்வி வலயத்தில் உள்ள நான்கு கோட்டங்களுள் காரைநகரக் கோட்டத்திலேயே ஒப்பீட்டு ரீதியாக உயர்ந்த பெறுபேறுகள் காணப்படுகின்றன. எனினும் எதிர் காலத்தில் காரைநகர்க் கோட்டமானது வலிகாமக் கோட்டத்துடன் இணைக்கப்படும் பட்சத்தில் தீவக கல்வி வலயத்தின் பொதப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் மோசமான சதவீதங்களைக் காட்டுமென்பதில் ஐயமில்லை. இந்தப் பின்புலத்தில் தீவகப் பிரதேசத்தில் தற்போது காணப்படும் மோசமான கல்வி நிலையைச் சிர்செய்வதற்கு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இந்த ஆய்வு முன்மொழிகின்றது.

தீவகத்தில் உள்ள ஓரளவு வசதியானவர்களும் அரச உத்தியோகத்தர்களும் தமது பிள்ளைகளை யாழ்ப்பாணத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்க அனுப்புவதனால் திவகத்தில கல்வி ˙ கல்விப் பெறுபேற்றில் தாக்கத்தை ஏற்படுத்தவாக முன்பு பார்த்தோம். இதற்கான காரணமாக தீவகத்தில் உள்ள பாடசாலைகளில் தேவையான பௌதீக வளங்களும் ஆசிரியர்களும் காணப்படாமையுமாகும். எனவே அப்பாடசாலைகளுக்குத் தேவையான பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுக்க வடமாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். ஆனால் அனைத்து பௌதீக வளங்களையும் வடமாகாணக் கல்வி அமைச்சினால் உடனடியாக வழங்குதல் சாத்தியமற்றது. தீவக அபிவிருத்தி ஒன்றியம், பூமிப் பந்தின் பல்வேறு இடங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் தீவகப் பாடசாலைகளின் பழைய மாணவர் ஒன்றியங்கள் போன்றவை தற்போது இப்பிரதேசப் பாடசாலைகளுக்கு பௌதீக வளங்களை வழங்கி வருகின்றன. இவை போதுமானதல்ல. எனவே் இவ் அமைப்புக்கள மேலும் தேவையான பௌதீக வளங்களை வழங்க முன்வருதல் அவசியமானதாகும்.

தீவகத்தில் பல்வேறு பாடங்களுக்கு பொருத்தமான ஆசியர்கள் இல்லாதுள்ளனர். ˙ பற்றாக்குறையாக உள்ள ஆங்கில பாட ஆசிரியர்களையும் ஏனைய பாட ஆசிரியர்களையும் உடனடியாக இந்த வலயத்திலுள்ள பாடசாலைகளுக்கு நியமிக்க நடவடிக்கை எடுத்தல் மிகவும் அவசியமாகும்.

மகாணக் கல்வித் திணைக்களமானது சீரான இடமாற்றக் கொள்கைகளைப் பயன்படுத்தி ஆசிரியர்களை இடம் மாற்றல், தீவகப் பிரதேசத்தின் உள்ளகப் பகுதிகளில் ஆசிரியர்களின் போக்குவரத்திற்கான வசதிகளை ஏற்படுத்துதல். உரிய காலத்தில் பாடநூல்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி என்பவை பாடசாலைகளுக்கு வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதல், உரிய பாடங்களுக்குப் பொருத்தமான ஆசிரிய ஆலோகர்களை நியமித்தல். ஆசிரிய ஆலோசகர்கள் மூலம் வழிகாட்டல், மேற்பார்வை, பின்னூட்டல் போன்றவற்றிற்கு முக்கியத்துவமளித்தல் போன்றவற்றுக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வட மாகாணக் கல்வித் திணைக்களமானது தீவகப் பிரதேசத்தில் மாணவரின் பெறுபேறுகள் தொடர்ச்சியாக வீழச்சியடைந்து வருவதற்கான காரணங்களை அறிவதற்கு ஆய்வு முயற்சிகளில் ஈடுபடல் காலத்தின் தேவையாகும் என்பதனை வலியுறுத்த வேண்டியுள்ளது.

**உசாத்துணைகள்**


இலங்கை பரீட்சைகள் திணைக்களம் <http://www.doenets.lk/exam/index.jsf>

கல்வி முகாமைத்துவ தகவல் தளம், வட மாகாணக் கல்வித் திணைக்கள இணையம் <http://www.edudept.np.gov.lk/selectresults.php>

குகபாலன், கா. (1994) தீவகம்- வளமும் வாழ்வும். தீவகக்கோட்டக் கூட்டுறவு ஒன்றியம். யாழ்ப்பாணம்